## சுருக்கம்

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் – தகுதி பெற்ற சத்துணவு அமைப்பாளர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கு சமூகநலத்துறையில் பதிவறு எழுத்தர், அலுவலக உதவியாளர் பணியிடத்தில் பதவி உயர்வும் தகுதி பெற்ற பெண் சத்துணவு அமைப்பாளர்களுக்கு மேற்பார்வையாளர் நிலை 2 பணியிடத்தில் பதவி உயர்வும் வழங்க ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சஉதி.2)துறை

அரசு ஆணை (நிலை) எண்.12

நாள் 12–01–2010
திருவள்ளுவர் ஆண்டு 2040
மார்கழி 28 ம் நாள்

படிக்கப்பட்டது:-

1 மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 21.11.09 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்புகள்.

2 சமூகநல ஆணையர், சென்னை அவர்களின் கடித எண். 46577/09/சஉதி. நி1, நாள்: 15.12.2009.

3 முதன்மைச் செயலாளர் / ஆணையர் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம் அவர்களின் கடித எண். 16618/இ3–2 / 09 நாள் 11.12.2009.

---

ஆணை

சத்துணவு / குழந்தைகள் மைய பணியாளர்கள் 21–11–09 அன்று நடத்திய நன்றி அறிவிப்பு மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பின்வருமாறு அறிவிப்பு செய்துள்ளார்கள்.

> "தகுதி பெற்ற சத்துணவு அமைப்பாளர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கு சமூகநலத்துறையில் பதிவறு எழுத்தர், அலுவலக உதவியாளர் பணியிடத்தில் பதவி உயர்வும், தகுதி பெற்ற பெண் சத்துணவு அமைப்பாளர்களுக்கு மேற்பார்வையாளர் நிலை 2 பணியிடத்தில் பதவி உயர்வும் வழங்கப்படும்"

2. மேற்காணும் அறிவிப்பினை தொடர்ந்து, மேலே 2 மற்றும் 3ல் படிக்கப்பட்டுள்ள கடிதங்களில் சமூக நல ஆணையர் மற்றும் முதன்மைச் செயலாளர் / ஆணையர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் அவர்களும் தகுதி பெற்ற சத்துணவு அமைப்பாளர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கு சமூகநலத்துறையில் பதிவறு எழுத்தர், அலுவலக உதவியாளர்

பணியிடத்தில் பதவி உயர்வும், தகுதி பெற்ற பெண் சத்துணவு அமைப்பாளர்களுக்கு மேற்பார்வையாளர் நிலை 2 பணியிடத்தில் பதவி உயர்வு வழங்கவும் பரிந்துரை செய்துள்ளனர்.

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, தகுதி பெற்ற சத்துணவு அமைப்பாளர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்களை சமூகநலத்துறையில் பதிவுறு எழுத்தர், அலுவலக உதவியாளர்களாக பணி நியமனமும், தகுதி பெற்ற பெண் சத்துணவு அமைப்பாளர்களுக்கு மேற்பார்வையாளர் நிலை 2 பணியிடத்தில் பதவி உயர்வும் வழங்க அரசு ஆணையிடுகிறது.

4. தகுதி பெற்ற சத்துணவு அமைப்பாளர்கள் பதிவுறு எழுத்தராக பதவி உயர்வு பெற அலுவலக உதவியாளராக பணி புரிந்திருக்க வேண்டிய விதி உள்ளதால், அலுவலக உதவியாளராக பணிபுரிந்த சத்துணவு அமைப்பாளர்களை காலிப்பணியிடங்கள் ஏற்படும் போது, மாநில முதுநிலை வரிசை அடிப்படையில் பதிவுறு எழுத்தராக பதவி உயர்வு வழங்கலாம் எனவும் அரசு ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

பா.இராம மோகனராவ்
முதன்மைச் செயலாளர்

பெறுநர்:-

சமூக நல ஆணையர், சென்னை–5
முதன்மைச் செயலாளர் / ஆணையர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம், சென்னை–113.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை–3
ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத்துறை, சென்னை–15.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–5/35/79.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
தலைமை துறை அரசு நிறுவனத் தணிக்கையர், சென்னை–2.

நகல்:-
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம்,
சென்னை–9.
மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, சென்னை–9.
நிதி (சந) துறை, சென்னை–9.
சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (ச.ந.7பிரிவு)துறை
இருப்புக்கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.